இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிதம்பரம்.

முன்னிலை: திரு. ப.உ. செம்மல், எம்.ஏ, எல்எல்.எம்.,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிதம்பரம்.

2022 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 21 ஆம் நாள் வியாழக் கிழமை.

**அசல் வழக்கு எண்: 179/2018**

**(C.N.R.NO.D0E 000306-2018)**

1. அரவிந்தன், த-பெ.மோகன்ராஜ், வயது 56, 48-22 வெள்ளப்பிறந்தான் முதலியார் தெரு, சிதம்பரம்
2. ஆரோவில், த-பெ.மோகன்ராஜ், வயது 47, கதவு எண்.4-24. சரஸ்வதி தெரு, மகாலிங்கபுரம், சென்னை 34.
3. சுதந்திர அரவிந்தம்மா, த-பெ.மோகன்ராஜ், க-பெ.கணேஷ்குமார், வயது 46, சன்னதி தெரு, விரிவாக்கம்,திருப்பனாந்தாள் ...வாதிகள்

/எதிர்/

1. ராஜேந்திரன், த-பெ.வேலாயுதம், வயது 57, 43B/NA. மாலைக்கட்டி தெரு, சிதம்பரம்
2. சீனுவாசன், த-பெ.வேலாயுதம், வயது 55, 32.A. Type -z, Block23.c. நெய்வேலி
3. விஸ்வநாதன், த-பெ.வேலாயுதம், வயது 50, 43B/NA. மாலைக்கட்டி தெரு, சிதம்பரம்
4. மங்கையர்கரசி, க-பெ. சண்முகம், வயது 48, த-பெ.வேலாயுதம்,
5. ராமலிங்கம், த-பெ.சிங்காரம், வயது. 78, 43B/NA. மாலைக்கட்டி தெரு, சிதம்பரம் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகம் மற்றும் தனித்த சுவாதீனம் வழங்கக் கோரியும் எதிர்கால வரும்படிக்கும் வழக்கு செலவுத் தொகைக்குமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் 29.10.2018, எண்ணிடப்பட்ட நாள் 30.10.2018 வழக்கின் மதிப்பு ரூ. 13,66,750 அதற்கு நீதிமன்றக் கட்டணம் ரூ.5,000 தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 37 (2)-ன் படி செலுத்தப்பட்டுள்ளது. 01.08.2018 அன்று ராஜேந்திரசோழகன் கிராமம் காட்டுமன்னார்கோவில் தாலுக்காவில் வழக்குமூலம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு 14-07-2022 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு என். சேதுராமன் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு டி.மகேஷ் ஆஜராகியும், 5ஆம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும் இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கில் உள்ள வழக்கு 1, 5 மற்றும் 7வது அயிட்ட சொத்து ஆகியவற்றில் வாதிகளுக்கு 1/2 பாகமும் வழக்கு 4வது அயிட்டச் சொத்தில் 20 செண்டில் மட்டுமே வாதிகளுக்கு 1/2 பாகம் வழங்கியும் வழக்கு 6வது அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 38 செண்ட் போக மீதியுள்ள சொத்தில் மட்டுமே வாதிகளுக்கு 1/2 பாகம் வழங்கியும் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. |
| 2 | இதர அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. |
| 3 | வாதிகள் எதிர்கால வரும்படி குறித்து உ.வி.மு.சட்டம் கட்டளை 20 விதி 12ன் கீழ் தனி மனு மூலம் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. |
| 4. | வாதிகளின் செலவுத் தொகையான ரூ.28,327.00ஐ பிரதிவாதிகள் செலுத்தக் கடவர். பிரதிவாதிகளின் செலவுத் தொகை ரூ.10,680.00 |

செலவு விவரம்

| வாதிகளின் செலவு விவரம் | | பிரதிவாதிகளின் செலவு விவரம் | |
|---|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | 5,000.00 | வக்காலத்து | 10.00 |
| வக்காலத்து | 10.00 | எழுத்துக் கூலி | 300.00 |
| படிமெமோ | 150.00 | மனுச் செலவு | 70.00 |
| மனுச் செலவு | 50.00 | தட்டச்சு செலவு | 300.00 |
| தட்டச்சு செலவு | 300.00 | வழக்கறிஞர் ஊதியம் | 10,000.00 |
| வழக்கறிஞர் ஊதியம் | 22,817.00 | | |
| மொத்தம் | 28,327.00 | மொத்தம் | 10,680.00 |

சொத்து விவரம்

காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, ராஜேந்திரசோழகன் கிராமம் நஞ்சை நிலங்கள்

1. ஆர்.எஸ்.நெ.21/3 --0.10.50 ஏர்ஸ்
2. ஆர்.எஸ்.நெ.21/4 --0.09.00 ஏர்ஸ்
3. ஆர்.எஸ்.நெ.159/2 --0.13 செண்ட் = 0.05.5 ஏர்ஸ்
4. ஆர்.எஸ்.நெ.12 - ஏக். 3.17 செண்டில் தென்புறம் ஏக். 1.33 செண்ட்

Boundaries: South of the Land of Rajendran, Aravinthan & Thiriburasundari, West of Poromboke Pathway, East of the road.

5. மன்னார்குடி கிராமம் சர்வே எண். 24/ஏ1 - ஏ1ல் 150 அடிக்கு 18 அடி வீடு மனை பட்டா நம்பர் 50 - 150 ft. East to West 18 ft. North to South. New R.S.No.173/1.

Boundaries: West of the Street, East of the Site purchased by Sivaprakasa Chettiar., South of the house of Pathway & Saminathan Vagayara.

6.காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, ராஜேந்திரசோழகன் கிராமம் புதிய சர்வே எண். 13/1ஏ - 0.79.04ஏர்ஸ்.

7. காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, ராஜேந்திரசோழகன் கிராமம் பழைய சர்வே எண். 13/1 - ஏக். 2.70 செண்ட்

8. காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, ராஜேந்திரசோழகன் கிராமம் பழைய சர்வே எண். 10/1 - 1.62.0 ஏர்ஸ்

9. காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, ராஜேந்திரசோழகன் கிராமம் சர்வே எண். 7/5ஏ.1 -- 0.03 செண்ட்.

எனது கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் பொறிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 21 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி.
சிதம்பரம்.

தீர்ப்பாணை

அசல் வழக்கு எண்.179/2018

நாள்:21.07.2022

இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிதம்பரம்

**<u>அசல் வழக்கு எண்.179/2018</u>**

மதிப்புச் சான்றிதழ்.

1) வழக்கின் பிரிவும் உட்பிரிவும் : தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு.42 மற்றும் 27(1)

2) வழக்கின் தன்மை : தனி சுவாதீனம் கோரி

3) மொத்த மதிப்பு : ரூ.13,66,750/-

4) செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் : ரூ.5,000/-

உத்தரவுபடி

தலைமை எழுத்தர்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
சிதம்பரம்.